கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம்: 35/2025

எனது இலக்கம் : ED/04/59/08/01/01-2026
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல.
2025. 11. 20

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து தேசிய கல்வியியல் கல்லூரிகளதும் பீடாதிபதிகள்

<u>இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களது வருடாந்த இடமாற்ற நடைமுறை - 2026</u>

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய தேசியக் கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் மத்திய நிலையங்களில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக இந்த இடமாற்ற நடைமுறை இனிமேல் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கமைய, இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

I. வருடாந்த இடமாற்றங்கள்
II. சேவையின் தேவை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள்
III. ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள்
IV. அரச உத்தியோகத்தர்களின் கோரிக்கையின் பேரில் மேற்கொள்ளப்படும் ஒத்து இடம் மாறுதல்

2. வருடாந்த இடமாற்றங்களுக்கு உட்படும் உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்

2.1 தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I, II மற்றும் III ஐச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களும் (தேசிய கல்வியியல் பீடாதிபதி, உப பீடாதிபதி மற்றும் ஆசிரியர் கலாசாலை அதிபர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் உட்பட) வருடாந்த இடமாற்றங்களுக்கு உட்படும் உத்தியோகத்தர்கள்

(அ) ஏதேனும் ஒரு சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக 08 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காவிடினும் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவர்.

உத்தியோகத்தர்கள் உட்பட) வருடாந்த இடமாற்றங்களுக்கு உட்படும் உத்தியோகத்தர்கள்

(அ) ஏதேனும் ஒரு சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக 08 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காவிடினும் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவர்.

(ஆ) I. தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதி, உப பீடாதிபதி மற்றும் ஆசிரியர் கலாசாலை அதிபர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் முறைப்படியான நியமனம் பெற்ற பதவியில் ஆகக் குறைந்தது 05 வருடங்களாவது சேவை செய்திருத்தல் இடமாற்றத்திற்காக விண்ணப்பிப்பதற்கு ஒரு தகைமையாகும்.

II. மேலே 2.1 (ஆ) I இன் கீழ் குறிப்பிடப்படாத இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் ஏனைய உத்தியோகத்தர்கள் தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றிலோ அல்லது ஆசிரியர் கலாசாலை ஒன்றிலோ அல்லது ஆசிரியர் மத்திய நிலையம் ஒன்றிலோ ஆகக் குறைந்தது 02 வருடங்கள் சேவை செய்திருத்தல் இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு ஒரு தகைமையாகும்

2.2 வருடாந்த இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படாத உத்தியோகத்தர்கள்

(அ) ஒரு உத்தியோகத்தரின் கோரிக்கை அல்லது வேறு விசேட காரணங்களின் (ஒழுக்கம் அல்லது சேவைத் தேவை) அடிப்படையிலோ அல்லாதவிடத்து, பொதுவாக 55 வயதைக் கடந்த உத்தியோகத்தர் ஒருவர் மாகாணத்திற்கு வெளியில் இடமாற்றம் செய்யப்பட மாட்டார். அவ்வாறாயினும், சேவைத் தேவைக்கேற்ப மாகாணத்திற்குள் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவார். இருப்பினும், ஒழுக்காற்று காரணங்களினாலோ அல்லது சேவைத் தேவையின் காரணமாக ஆசிரிய மாணவர்களின் முன்னேற்றத்தை முதன்மைப்படுத்தியோ ஒரு உத்தியோகத்தர் மாகாணத்திற்கு வெளியிலும் கூட இடமாற்றம் செய்யப்படலாம்.

(ஆ) வருடாந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் ஆண்டின் ஜனவரி 1 ஆம் திகதிக்கு 58 வயதைக் கடந்த உத்தியோகத்தர் ஒருவர், அவரது கோரிக்கை இல்லாதவிடத்து, மாகாணத்திற்குள்ளும் கூட இடமாற்றம் செய்யப்பட மாட்டார்.

3. வருடாந்த இடமாற்ற சபையின் கட்டமைப்பு

(I) மேலதிகச் செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்) - தலைவர்

(II) பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) - உறுப்பினர்

(III) உதவிச் செயலாளர் (ஆசிரியர் கல்வியியலாளர்) - உறுப்பினர்

(IV) 15% உத்தியோகத்தர் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட ஒவ்வொரு ஆசிரியர் கல்வியியலாளர் தொழிற் சங்கத்தினாலும் பெயரிடப்பட்ட பிரதிநிதி ஒருவர்

4. வருடாந்த இடமாற்றப் பரிந்துரைகள் மீளாய்வுக் குழு

இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பான மேன்முறையீடுகளைப் பரிசீலிப்பதற்காக வருடாந்த இடமாற்றப் பரிந்துரைகள் மீளாய்வுக் குழுவொன்று நிறுவப்பட வேண்டும். அதன் மூலம் பின்வரும் விடயங்கள் பரிசோதிக்கப்பட்டு தீர்மானங்கள் வழங்கப்படும்.

(I) இந்த இடமாற்றக் கொள்கைக்கு அமையாதவாறு மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள்

(II) உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் (விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பு 1, 2, 3, 4, 5 ஆகிய சேவை நிலையங்களாகக் கருதப்படும்.)

(III) இடமாற்றங்களுக்காக விண்ணப்பித்த திகதிக்குப் பின்னர் உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்ட திடீர் விபத்துக்கள், கஷ்டங்கள், நோய்கள் போன்ற அனுதாபகரமான நிலைமைகள் மற்றும் நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின்.

4.1 வருடாந்த இடமாற்றப் பரிந்துரைகள் மீளாய்வுக் குழுவின் கட்டமைப்பு

(I) கல்வி அமைச்சின் செயலாளர் - தலைவர்

(II) சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்)

(III) பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி)

5. வருடாந்த இடமாற்றங்களை வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் ஏனைய பொதுவான விடயங்கள்

5.1 வருடாந்த இடமாற்றங்களின் போது காலம் முந்தைய வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்குக் கணக்கிடப்படும்.

5.2 இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கும்போது, தான் இடமாற்றம் செய்ய விரும்பும் ஐந்து இடங்களை முன்னுரிமைக்கமையக் குறிப்பிட்டு, உரிய படிவத்தில் (மாதிரிப் படிவ

இல. 01 இற்கமைய) இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். குறித்த கோரிக்கைக்கமைய, கோரப்படும் சேவை நிலையத்திற்கு இடமாற்றம் வழங்குவதற்கு இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் முயற்சி எடுக்கப்படுவதுடன், கோரப்பட்ட இடத்திற்கு இடமாற்றம் வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் இடமாற்றச் சபையின் விருப்பத்திற்கேற்ப அவர்களுக்கு வேறு பொருத்தமான சேவை நிலையம் வழங்கப்படும்.

5.3 மனைவி மற்றும் கணவன் ஆகிய இருவரும் அரச சேவையில் ஈடுபட்டிருந்தால், அவ்விருவருக்கும் அவர்களது கோரிக்கைக்கமைய ஒரே பிரதேசத்தில் சேவை செய்ய இடமளிப்பதற்கு இடமாற்றச் சபை சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

5.4 அங்கவீனமான பிள்ளைகள், நீண்டகால நோயின் காரணமாக ஒரே இடத்தில் இருக்கும் வாழ்க்கைத்துணை மற்றும் வாழ்க்கைத்துணை வெளிநாடு சென்றிருக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுடன் தமது நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளையும் உள்ளடக்கி இடமாற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5.5 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்களிலிருந்து 15% பிரதிநிதித்துவத்தைக் கொண்ட தொழிற்சங்கத்தின் தாய் சங்கத்தின் தலைவர்/ **செயலாளர்/ பொருளாளர் மற்றும் மத்திய செயற்குழுவின் உறுப்பினர்களை** இடமாற்றம் செய்வதாயின், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தின் செயலாளரின் பரிந்துரையை கவனத்தில் கொண்டு சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத இடமொன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும். தாபன விதிக் கோவையின் XXV ம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் உள்ள அனுசரனைகளைப் பெற எதிர்பார்க்கும் அனைத்துத் தொழிற்சங்கங்களும் தமது தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் பற்றிய விபரங்களை இந்த ஆவணத்தின் 5.17 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய இடமாற்ற அதிகாரிக்கு இடமாற்றச் சபையின் பணிகள் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

5.6 இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர் கற்பிக்கும் பாடம் மற்றும் அதற்காகப் பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) இன் பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

5.7 ஒரு உத்தியோகத்தரின் வாழ்க்கைத்துணை பொலிஸ் அல்லது முப்படையில் சேவையில் ஈடுபட்டு வடக்கு கிழக்கு யுத்தக் கடமைகளின் போது அங்கவீனமடைந்துள்ளதாக

எழுத்து மூல ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் அவர்களின் கோரிக்கையின் படி மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், அத்தகைய உத்தியோகத்தர்களின் இடமாற்றக் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

5.8 இடமாற்ற சபையின் பரிந்துரைகளின் பேரில் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும்போது, தேசிய கல்வியியல் கல்லூரி/ஆசிரியர் மத்திய நிலையங்கள்/ஆசிரியர் கலாசாலை பணியாளர்களின் கனிஷ்ட/சிரேஷ்டத்துவத்தின் சமநிலையைப் பேண எப்பொழுதும் முயற்சி செய்ய வேண்டும். மேலும், இந்த உத்தியோகத்தர்கள் தேசிய கல்வியியல் கல்லூரிகளிலும், ஆசிரியர் கலாசாலைகளிலும் மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களிலும் சேவை செய்துள்ள சேவைக் காலமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

5.9 வருடாந்த இடமாற்ற நடைமுறையின் 2.1 ஆம் பந்தியின் கீழ் உள்ளடக்கப்படும் ஒரு உத்தியோகத்தர் வேறொரு இடத்திற்கு இடமாற்றம் கோரியுள்ள போது, அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, அதன் 2.2 ஆம் பந்தியின் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள, அந்த இடத்தில் ஆகக் கூடிய சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர்கள் அங்கிருந்து வெளியே இடமாற்றம் செய்யப்படலாம்.

5.10 ஒரு சேவை நிலையத்தில் 8 வருடங்களுக்கு மேல் சேவை செய்த உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல் உரிய படிவத்தில் (இல. இ.ஆ.க.சே/வ.இ.மா./02 இற்கமைய) சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு, உரிய பீடாதிபதி/ஆசிரியர் கலாசாலை அதிபர்/ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர் ஊடாக வருடாந்தம் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் கல்விச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5.11 "நேர்முகப் பரீட்சைச் சபை ஒன்றின் பரிந்துரைகளின் பேரில் முறைப்படி நியமிக்கப்பட்ட தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி, உப பீடாதிபதி மற்றும் ஆசிரியர் கலாசாலை அதிபர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது, முறைப்படி மேற்குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர் மாத்திரமே அவரது பதிலாளராக இருக்க வேண்டும். (அவர்கள் இடமாற்றம் செய்யப்படும் போது, குறித்த பதவியில் கடமையைப் பொறுப்பேற்றதன் பின்னர், அந்த உத்தியோகத்தரை குறித்த பதவிக்கு நியமிக்கும் கடிதமொன்று கல்விச் சேவைக் குழுவினால் வழங்கப்படும்)

(அ). நேர்முகப் பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படும் பதவி நியமனங்களுடன் தொடர்புடைய அந்தப் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு (ஓய்வுபெறல் அல்லது வேறு காரணங்களால்) இடமாற்ற நடைமுறைக்கமைய இடமாற்றம் செய்யப்படுபவர்கள் முறையாக நேர்முகப் பரீட்சை மூலம் அந்தப் பதவிகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரமே ஆவர். (நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படாத உத்தியோகத்தர் ஒருவர் வருடாந்த இடமாற்றத்தின் கீழ் அத்தகைய வெற்றிடத்திற்காக இடமாற்றம் செய்யப்பட மாட்டார்)

5.12 இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கும்போதும் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்கும்போதும், அதற்காகத் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படும் மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படும்.

5.13 ஒவ்வொரு உத்தியோகத்தர் தொடர்பிலும் சரியான மற்றும் முழுமையான தகவல்களை வழங்குவதை நிறுவனத் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். பிழையான அல்லது முழுமையற்ற தகவல்கள் அனுப்பப்பட்டிருப்பது வெளிப்படுத்தப்பட்டால், அது தொடர்பில் உரிய நிறுவனத் தலைவர்கள் மற்றும் அந்தப் பட்டியலைத் தயாரித்த, சரி பிழைகளைப் பரிசோதித்த உத்தியோகத்தர்களும் பொறுப்புக் கூற கடமைப்பட்டிருப்பதுடன் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5.14 இடமாற்றச் சபைகளினால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை பதிலாளர் வரும்வரை தடுத்து வைக்காமல், குறித்த தினத்தில் புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்கக்கூடியவாறு விடுவிப்பதை உரிய கல்வியியல் கல்லூரிகள் /நிறுவனத் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். இந்த விதிமுறைகளுக்கு முரணாகச் செயற்படும் நிறுவனத் தலைவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

5.15 இடமாற்றங்களைப் பெற்ற உத்தியோகத்தர்களின் (மேன்முறையீடுகளைக் கருத்தில் கொண்ட பின்னர்) சம்பளங்கள் புதிய சேவை நிலையத்திற்கு அனுப்பப்படும் என்பதுடன், மேலே 5.14 இற்கமைய விடுவிக்காமல் தடுத்து வைக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாகச் சம்பளம் வழங்குவது தொடர்பாக அந்தந்த நிறுவனத் தலைவர்கள் பொறுப்பை ஏற்க வேண்டும்.

5.16 இடமாற்றங்களைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்காக உரிய காலத்திற்கு முன்பே வேறு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி, வருடாந்த இடமாற்றங்களை உரிய தினத்தில் நடைமுறைப்படுத்த திணைக்களத் தலைவர்கள் / நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான விடயங்கள் தொடர்பாக பின்னர் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது

5.17 இடமாற்றங்களைப் பெற வாய்ப்பு உள்ளதாக கருதப்படும் எவரேனும் ஒரு **உத்தியோகத்தரை சேவைத் தேவை அடிப்படையில் மேலும் ஒரு வருடம் தமது நிறுவனத்தினுள் இருக்கச் செய்ய வேண்டும் என நிறுவனத் தலைவர் கருதுவாராயின்** மாத்திரம், பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அந்தத் தேவையைக் குறித்துத் தெளிவுபடுத்தி, உரிய நிறுவனத் தலைவரின் தனிப்பட்ட பரிந்துரையுடன் கல்விச் செயலாளரிடம் தனது கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். இடமாற்றச் சபை அது குறித்து கவனம் செலுத்தி செயற்படும். ஒரு வருடம் இவ்வாறு தரித்திருக்கச் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

5.18 இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் (தொகுதி இலக்கம் 01) இன் 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பொருந்தும்.

## 6. வருடாந்த இடமாற்ற கால அட்டவணை

| | செயற்பாடு | திகதி |
|---|---|---|
| 1. | வருடாந்த இடமாற்ற சபைகளை நிறுவுதல் | 2025 நவம்பர் மாதம் 10 ம் திகதிக்கு முன்னர் |
| 2. | வருடாந்த இடமாற்ற அறிவித்தல்களை வெளியிடல் | 2025 நவம்பர் மாதம் 30 ம் திகதிக்கு முன்னர் |
| 3. | பூரணப்படுத்தப்பட்ட வருடாந்த இடமாற்ற விண்ணப்பப் படிவங்களை உரிய அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் | 2025 டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் |
| 4. | உரிய அதிகாரியால் விண்ணப்பப் படிவங்கள் இடமாற்ற சபையிடம் கையளிக்கப்படல் | 2026 ஜனவரி மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் |
| 5. | வருடாந்த இடமாற்ற சபையின் இடமாற்றப் பரிந்துரைகள் உரிய அதிகாரிக்கு எழுத்து மூலம் கையளிக்கப்படல் | 2026 ஜனவரி மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் |
| 6. | பரிந்துரைக்கப்பட்ட இடமாற்றங்கள் பற்றிய அறிவித்தல்களை வெளியிடல் மற்றும் வருடாந்த இடமாற்றப் பரிந்துரைகள் மீளாய்வுக் குழு நியமித்தல் | 2026 பெப்ரவரி மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் |
| 7. | இடமாற்றங்கள் தொடர்பான மீளாய்வுக் குழுக்களுக்கான மேன்முறையீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி | 2026 பெப்ரவரி மாதம் 28 ம் திகதிக்கு முன்னர் |

| | | |
|---|---|---|
| 8. | வருடாந்த இடமாற்றப் பரிந்துரைகள் மீளாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பான தமது எழுத்து மூலமான பரிந்துரைகளை உரிய அதிகாரியிடம் எழுத்து மூலம் கையளிக்கப்படல். | 2026 மார்ச் மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் |
| 9. | இறுதியான வருடாந்த இடமாற்றக் கட்டளைகளை வெளியிடல் | 2026 ஏப்ரல் மாதம் 01 ம் திகதிக்கு முன்னர் |
| 10. | வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படல் | 2026 மே மாதம் 01 ம் திகதி முதல் |

7. வருடாந்த இடமாற்றக் கட்டளைகளுக்கு எதிராக மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல் பற்றிய விபரங்கள்

7.1 வருடாந்த இடமாற்றப் பரிந்துரைகள் மீளாய்வுக் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக எவரேனும் ஒரு அரச உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிப்பாராயின், அந்த மேன்முறையீடு படிவம் இல. 03 இற்கமைய மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், தன்னால் சமர்ப்பிக்கப்படும் விடயங்களை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அந்த மேன்முறையீட்டுடன் சமர்ப்பிக்கவும் அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7.2 ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்காக உத்தியோகத்தர் ஒருவரால் கையளிக்கப்படும் மேன்முறையீட்டினை, அதற்குரிய அனைத்துக் கோவைகள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் போன்றவற்றுடன், அதற்குரிய தமது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுடன், அந்த மேன்முறையீடு கிடைத்த 15 நாட்களுக்குள் இணைப்பு 04 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிடம் சமர்ப்பிப்பதை உரிய கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இருப்பினும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிக் கோவையின் XVIII ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றம் சம்பந்தமான மேன்முறையீடுகள் உரிய கோவைகள், ஆவணங்கள், அறிக்கைகள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுடன் 2026 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. உத்தியோகத்தர்களது பொறுப்பு

8.1 ஒரு வருடத்தில் இடமாற்றங்களுக்கு உட்படும் உத்தியோகத்தர்கள் இடமாற்ற விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காவிடினும், அந்த உத்தியோகத்தர்கள் இந்தச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் கீழ் வருடாந்த இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

8.2 வருடாந்த இடமாற்றக் கட்டளை ஒன்றைப் பெற்ற சகல உத்தியோகத்தர்களும் குறித்த தினத்தில் புதிய கடமை நிலையத்திற்கு சேவைக்காக அறிக்கையிட கடமைப்பட்டுள்ளனர்

9. இல. 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிக் கோவையின் 257 இன் I, II, III, IV, V, VI ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமுலில் இருக்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

நாலக கළුවෙව
செயலாளர்

Nalaka Kaluwewe
Secretary
Ministry of Education, Higher Education and
Vocational Education

# இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவம் - 2026

| பதவி மற்றும் வகுப்பு | | அலுவலக பயன்பாட்டிற்கு | |
|---|---|---|---|

அ. தனிப்பட்ட தகவல்கள்

1. உத்தியோகத்தரின் முழுப் பெயர் : ..........................................................................................
2. முதலெழுத்துடன் பெயர் : ..........................................................................................
3. முதலெழுத்துடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ..........................................................................................
4. பிறந்த திகதி : ..........................................................................................
5. வயது (2026/01/01 ஆம் திகதிக்கு) : வரு ........... மாதம் ........... நாள் ...........
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................
7. பால்நிலை (ஆண் / பெண்) : ..........................................................................................
8. நிரந்தர முகவரி : ..........................................................................................
9. தற்காலிக முகவரி : ..........................................................................................
10. தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் : ..........................................................................................
11. திருமணமானவர்/ திருமணமாகாதவர் : ..........................................................................................
12. திருமணமானவராயின்,
    - 12.1 வாழ்க்கைத்துணையின் பெயர் : ..........................................................................................
    - 12.2 தொழில் மற்றும் சேவை நிலையம் : ..........................................................................................
    - 12.3 பிள்ளைகள் பற்றிய விபரம்

| தொடர் இல. | வயது | கல்வி கற்கும் பாடசாலை மற்றும் தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

ஆ. சேவைத் தகவல்கள்

13. தற்போது சேவையாற்றும் நிலையம் : ..........................................................................................
14. அச் சேவை நிலைய முகவரி : ..........................................................................................
15. கடமைத் தொலைபேசி இலக்கம் : ..........................................................................................
16. தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................

17. நியமனக் கடித இலக்கம் மற்றும் திகதி : ..........................................................................................

18. நியமனப் பாடம் மற்றும் நியமன மொழி மூலம் : ........................................................................

19. நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதா ? : ......................................................................................

20. சேவை நிலையம் அமைந்துள்ள மாகாணம் : ..........................................................................

21. தற்போதைய சேவை நிலையத்திற்கு அறிக்கையிட்ட திகதி :

22. தற்போதைய சேவை நிலையத்தில் சேவைக் காலம்: வரு ........... மாதம் ........... நாள் ...........

(2025.12.31 ம் திகதிக்கு)

23. முந்தைய சேவை நிலையங்கள்

| தொடர் இல. | சேவை நிலையம் | முதல் | வரை | கால வரையறை | |
|---|---|---|---|---|---|
| | | | | வருடம் | மாதம் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

24. நியமன மொழி மூலம் : ..............................................................................................

25. நியமனக் கடிதத்திற்கமைய விடயத் துறை : .......................................................................

26. தற்போது தாம் பொறுப்பு வகிக்கும் விடயத் துறை : ...........................................................

..........................................................................................................................

..........................................................................................................................

## இ. இடமாற்றம் தொடர்பான தகவல்கள்

27. தற்போதைய சேவை நிலையத்தில் நியமிக்கப்பட்ட எவ்வளவு காலத்தின் பின்னர் கோரப்படும் இடமாற்றம்? : ..........................................................................................

28. இடமாற்றம் கோருவதற்கான காரணங்கள் : ...........................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(மருத்துவ காரணங்களின் பேரில் செய்யப்படும் கோரிக்கையாயின் அது மருத்துவச் சான்றிதழ் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்.)

29. விசேட காரணங்கள் இருப்பின் : ..........................................................................................

30. இடமாற்றம் கோரப்படும் நிலையங்கள்

1. ........................................................................................................................
2. ........................................................................................................................
3. ........................................................................................................................
4. ........................................................................................................................
5. ........................................................................................................................

31. மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மை மற்றும் சரியானவை என நான் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ........................................ ....................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

ஈ. பீடாதிபதி/ வலயப் பணிப்பாளரின் பரிந்துரை

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரின் இடமாற்றக் கோரிக்கையை பதிலாளர் சகிதம் / பதிலாளர் இன்றி / பதிலாளரை பின்னர் வழங்குவதன் அடிப்படையில் பரிந்துரை செய்கிறேன்

.................................... ....................................

திகதி

கையொப்பம்
பதவி முத்திரை

உ. பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) இன் பரிந்துரை அல்லது ஆசிரியர் கலாசாலை/ ஆசிரியர் மத்திய நிலையங்களுக்கு, கல்விப் பணிப்பாளர் (ஆசிரியர் கல்வி நிர்வாகம்) இன் பரிந்துரை

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரின் இடமாற்றக் கோரிக்கையை பதிலாளர் சகிதம் / பதிலாளர் இன்றி / பதிலாளரை பின்னர் வழங்குவதன் அடிப்படையில் பரிந்துரை செய்கிறேன்.

.................................... ....................................

திகதி

கையொப்பம்
பதவி முத்திரை

# 2026 வருடாந்த இடமாற்ற மேன்முறையீட்டு விண்ணப்பப் படிவம்

(அ) உத்தியோகத்தரால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

01. உத்தியோகத்தரின்

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்:- ............................................................................

1.2 பதவி மற்றும் தரம்:- ............................................................................

1.3 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் முதல் நியமனத் திகதி:- .................

1.4 அந்த நியமனத் திகதிக்கு அமைய கடமையைப் பொறுப்பேற்ற திகதி:- ...................

1.5 நியமனப் பாடம் மற்றும் நியமன மொழி மூலம் : ...................................................

1.6 வதிவிட முகவரி :- ............................................................................

1.7 பிறந்த திகதி:- ............................................................................

02. உத்தியோகத்தரின்

2.1. தற்போதைய சேவை நிலையம்:- ............................................................................

2.2. அந்த சேவை நிலையத்தில் கடமைக்கு அறிக்கையிட்ட:- ......................................

2.3 முதல் நியமனத் திகதி முதல் சேவையாற்றியுள்ள இடங்கள் மற்றும் காலப் பகுதிகள் தொடர்பான விபரங்கள்

| தொடர் இல. | சேவைக் காலம் | | சேவை நிலையம் |
|---|---|---|---|
| | முதல் | வரை | |
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |
| 04 | | | |

03. இடமாற்றம் தொடர்பான விபரங்கள்

3.1. இடமாற்றம் கிடைக்கப் பெற்றுள்ள சேவை நிலையம் :- .......................................

3.2. மேன்முறையீட்டின் மூலம் கோரப்படும் சேவை நிலையம்:- ..................................

3.3. மேன்முறையீடு செய்வதற்கான காரணங்கள்:- ........................................................

............................................................................................................

............................................................................................................

திகதி.....................................                ....................................................

உத்தியோகத்தரின் கையொப்பம்

(ஆ) பீடாதிபதி/ வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளஉத்தியோகத்தரின் இடமாற்ற மேன்முறையீட்டுப் படிவத்தை பரிந்துரை செய்கிறேன். / பரிந்துரை செய்யவில்லை.

.................................... ....................................

திகதி

கையொப்பம்
பதவி முத்திரை

(இ). பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) இன் பரிந்துரை அல்லது ஆசிரியர் கல்லூரிகள்/ ஆசிரியர் மத்திய நிலையங்கள் எனின், கல்விப் பணிப்பாளர் (ஆசிரியர் கல்வி நிர்வாகம்) இன் பரிந்துரை

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளஉத்தியோகத்தரின் இடமாற்ற மேன்முறையீட்டுப் படிவத்தை பரிந்துரை செய்கிறேன். / பரிந்துரை செய்யவில்லை.

.................................... ....................................

திகதி

கையொப்பம்
பதவி முத்திரை

இ.ஆ.க.சே. வருடாந்த இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகள் – மாதிரிப் படிவ இல 03

## 2026 வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல் - மேன்முறையீட்டாளர் பற்றிய தகவல்கள்

அ. தனிப்பட்ட தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. முதலெழுத்துக்களுடன் பெயர்:- | | | |
| 02. பதவி மற்றும் தரம் | | | |
| 03. பிறந்த திகதி :- YYYY/MM/DD | 04. வயது:- (2026/01/01 ஆம் திகதிக்கு) | 05. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- | 06. பால் நிலை (ஆண் / பெண்):- |
| 07. நிரந்தர முகவரி:- | 08. தற்காலிக முகவரி:- | 09. தொலைபேசி இலக்கம் அலுவலகம்:- தனிப்பட்ட:- | |
| 10. திருமணமானவர் / திருமணமாகாதவர் | 11. வாழ்க்கைத் துணையின் பெயர்:- | 12. வாழ்க்கைத்துணையின் தொழில் மற்றும் சேவை நிலையம்:- | |
| 13. பிள்ளைகளின் எண்ணிக்கை:- | 14. அவர்களின் வயது:- | 15. கல்வி கற்கும் பாடசாலைகள்:- | |

ஆ. சேவைத் தகவல்கள்

| | |
|---|---|
| 16. தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி:- | |
| 17. தற்போதைய சேவை நிலையம்:- | 18. சேவை நிலையம் அமைந்துள்ள நகரம் :- |
| 19. தற்போதைய சேவை நிலையத்தில் அறிக்கையிட்ட திகதி:- YYYY/MM/DD | 20. தற்போதைய சேவை நிலையத்தில் சேவைக் காலம் (2025.12.31 ஆம் திகதிக்கு) வரு……. மாதம் ……. நாள் ……. |
| 21. அனுகூலம் கிடைக்கும் (விருப்பத்திற்குரிய) சேவை நிலையமொன்றில்/ நிலையங்களில் சேவையாற்றியுள்ளீர்களா? | |

| 22. அரச சேவையில் முந்தைய சேவை நிலையங்கள் | | சேவை நிலையம் | விருப்பத்திற்குரிய சேவை நிலையம்/ விரும்பப்படாத சேவை நிலையம் என்பதாக | சேவைக் காலம் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| | 1 | | | | |
| | 2 | | | | |
| | 3 | | | | |
| | 4 | | | | |
| | 5 | | | | |
| | 6 | | | | |

இ. இடமாற்றக் கோரிக்கை தொடர்பான தகவல்கள் (உரிய கூட்டினுள் ✓ எனக் குறியிடவும்)

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பித்துள்ளார் | ஆம் | | இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருந்தால், விண்ணப்பித்துள்ள சேவை நிலையங்கள்<br>1.<br>2.<br>3.<br>4.<br>5. |
| | | இல்லை | | |
| இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தால், அந்த சேவை நிலையம் | | | | |

24. இடமாற்ற சுற்றில் உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை..............................

| | | |
|---|---|---|
| 25. இடமாற்ற மீளாய்வுக் குழுவிற்கு விண்ணப்பித்துள்ளார் | ஆம் | |
| | இல்லை | |

26. மீளாய்வுக் குழுவிற்கு செய்யப்பட்ட கோரிக்கை தொடர்பான தகவல்கள்

| | | |
|---|---|---|
| இடமாற்றத்தை இரத்து செய்தல் | | இடமாற்றத்தைத் திருத்துவதற்கு விண்ணப்பித்திருந்தால், அவ்வாறு விண்ணப்பித்த சேவை நிலையங்கள்<br>01 ..................................................<br>02 ..................................................<br>03 .................................................. |
| திருத்தம் செய்தல் | | |
| புதிய இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்ளல் | | |

| |
|---|
| 27. இடமாற்ற மீளாய்வுக் குழுவின் தீர்மானம் |

28. இடமாற்ற மீளாய்வுக் குழுவின் தீர்மானத்திற்கு எதிராக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கான காரணங்கள்

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................

29. மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களை நிரூபிப்பதற்குரிய எழுத்து மூலமான ஆதாரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் கீழே குறிப்பிடப்படும் இணைப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன

இணைப்பு (01) ..........................................................................................

இணைப்பு (02) ..........................................................................................

இணைப்பு (03) ..........................................................................................

30. கோரும் சலுகை

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை மற்றும் சரியானவை என உறுதியளிக்கிறேன்.

............................ ..................................

திகதி கையொப்பம்

ஈ. அமைச்சு / திணைக்களத் தலைவரின் பரிந்துரை

உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் அவரது தனிப்பட்ட கோவைக்கமைய சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். 2025 வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீட்டை பரிந்துரை செய்கிறேன்/ கீழே குறிப்பிடப்பட்ட காரணங்களின் பேரில் பரிந்துரை செய்யவில்லை

I. ..........................................................................................................................

II. ..........................................................................................................................

III. ..........................................................................................................................

.................................... ....................................

திகதி கையொப்பம்

உ. இடமாற்ற அதிகாரியின் பரிந்துரை

I. இடமாற்ற சுற்றுடன் தொடர்புறும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை : ..........................

II. மேன்முறையீடு தொடர்பான பரிந்துரை : ..........................................................................

..........................................................................................................................

.................................... ....................................

திகதி கையொப்பம்

## 2026 வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல் - பதிலாளர் பற்றிய தகவல்கள்

I. மேன்முறையீட்டாளரின் பெயர் மற்றும் பதவி :

..........................................................................................

II. மேன்முறையீட்டாளருக்குரிய பதிலாளர் தொடர்பான தகவல்கள்

அ. தனிப்பட்ட தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. முதலெழுத்துக்களுடன் பெயர் :- | | | |
| 02. பதவி மற்றும் தரம் | | | |
| 03 பிறந்த திகதி:- YYYY/MM/DD | 04. வயது:- (2026/01/01 ஆம் திகதிக்கு) | 05. தேசிய அடையாள அட்டை இலக்கம்:- | 06. பால் நிலை (ஆண் / பெண்):- |
| 07. நிரந்தர முகவரி:- | 08. தற்காலிக முகவரி:- | 09. தொலைபேசி இலக்கம்<br>அலுவலகம்:-<br>தனிப்பட்ட:- | |
| 10. திருமணமானவர் / திருமணமாகாதவர் | 11. வாழ்க்கைத் துணையின் பெயர்:- | 12. வாழ்க்கைத்துணையின் தொழில் மற்றும் சேவை நிலையம்:- | |
| 13. பிள்ளைகளின் எண்ணிக்கை:- | 14. அவர்களின் வயது:- | 15. கல்வி கற்கும் பாடசாலைகள்:- | |

ஆ. சேவைத் தகவல்கள்

| | |
|---|---|
| 16. தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி:- | |
| 17. தற்போதைய சேவை நிலையம்:- | 18. சேவை நிலையம் அமைந்துள்ள நகரம் :- |
| 19. தற்போதைய சேவை நிலையத்தில் அறிக்கையிட்ட திகதி:- YYYY/MM/DD | 20. தற்போதைய சேவை நிலையத்தில் சேவைக் காலம் (2025.12.31 ஆம் திகதிக்கு)<br>வரு....... மாதம் ....... நாள் ....... |
| 21. அனுகூலம் கிடைக்கும் (விருப்பத்திற்குரிய) சேவை நிலையமொன்றில்/ நிலையங்களில் சேவையாற்றியுள்ளீர்களா? | |

| 22. அரச சேவையில் முந்தைய சேவை நிலையங்கள் | | சேவை நிலையம் | விருப்பத்திற்குரிய சேவை நிலையம்/ விரும்பப்படாத சேவை நிலையம் என்பதாக | சேவைக் காலம் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| | 1 | | | | |
| | 2 | | | | |
| | 3 | | | | |
| | 4 | | | | |
| | 5 | | | | |
| | 6 | | | | |

இ. இடமாற்றக் கோரிக்கை தொடர்பான தகவல்கள் (உரிய கூட்டினுள் ✓ எனக் குறியிடவும்)

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பித்துள்ளார் | ஆம் | | இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருந்தால், விண்ணப்பித்துள்ள சேவை நிலையங்கள்<br>1.<br>2.<br>3. |
| | | இல்லை | | |
| இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தால், அந்த சேவை நிலையம் | | | | |

| | | |
|---|---|---|
| 24. இடமாற்ற மீளாய்வுக் குழுவிற்கு விண்ணப்பித்துள்ளார் | ஆம் | |
| | இல்லை | |

25. மீளாய்வுக் குழுவிற்கு செய்யப்பட்ட கோரிக்கை

| | | |
|---|---|---|
| இடமாற்றத்தை இரத்து செய்தல் | | இடமாற்றத்தைத் திருத்துவதற்கு விண்ணப்பித்திருந்தால், அவ்வாறு விண்ணப்பித்த சேவை நிலையங்கள்<br>01 ..........................................<br>02 ..........................................<br>03 .......................................... |
| திருத்தம் செய்தல் | | |
| புதிய இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்ளல் | | |

| |
|---|
| 26. இடமாற்ற மீளாய்வுக் குழுவின் தீர்மானம் |

27. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா/ இல்லையா என்பதாக

..........................................................................................................

28. மேன்முறையீட்டாளரின் கோரிக்கையை நிறைவேற்றும் பட்சத்தில் பதிலாளருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இடமாற்ற சுற்றினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் பரிந்துரை:

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை மற்றும் சரியானவை என உறுதியளிக்கிறேன்.

திகதி............................ ...................................

கையொப்பம்